செய்தி வெளியீடு எண்: 921 நாள்: 14.12.2018

## செய்தி வெளியீடு

### சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், கூடமலை பகுதியில் இன்று (14.12.2018) பொதுமக்கள் அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி.கே.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை

தமிழ்நாடெங்கும் நீரை சேமிப்பதற்கு திட்டங்கள் உருவாக்குவதற்காக தனிப் பிரிவே உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளரை நியமித்து, அவர்கள் அதற்காக திட்டத்தை வகுத்துக் கொடுத்து, அரசு செயல்படுத்த இருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின், அம்மாவின் மறைவிற்குப் பிறகு, இந்த ஆட்சி கலைந்துவிடும், தான் முதலமைச்சராகி விடலாம் என்று கனவு கண்டிருந்தார், அந்தக் கனவு பகல் கனவாகிவிட்டது. டி.டி.வி தினகரனும் திமுக–வின் தூண்டுதலில், இந்தக் கட்சியை உடைக்க ஒரு கட்சியை ஆரம்பித்தார். இன்றைக்கு பாலாஜி என்கிற ஒரு செங்கல் பிடுங்கி சென்றுவிட்டது. அவரை முதலமைச்சராக வேண்டும் என்று எங்களிடமிருந்து பிரிந்து சென்றார், இப்பொழுது ஸ்டாலினை முதலமைச்சராக்க வேண்டும் என்று சென்றிருக்கிறார். கடைசியில், யாருடன் நடுத்தெருவில் நிற்கப் போகிறாரோ தெரியவில்லை. இதை எதற்காக சொல்கிறேனென்றால், திமுக–விற்கு கொள்கை, கோட்பாடே கிடையாது, அதிகாரம் மட்டும்தான் அவர்களுக்குத் தேவை. பாரதீய ஜனதா ஆட்சியின்பொழுது, கூட்டணி அமைத்து ஆட்சியில் இருந்தார்கள். அதற்கு சறுக்கல் வந்தவுடன், காங்கிரசிடம் கூட்டு சேர்ந்து அங்கே மத்திய அமைச்சராக இருந்தார்கள், அவர்களுக்குத் தேவை அதிகாரம் ஒன்றுதான். 14 ஆண்டுகாலம் தொடர்ந்து மத்தியில் ஆட்சிசெய்த ஒரு கட்சி திமுக தான், தமிழ்நாட்டு மக்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை, அவர்கள் குடும்பம்தான் வளர்ந்தது, கருணாநிதி, அவருடைய பையன், இப்பொழுது பேரனும் வந்துவிட்டார், எல்லாம் வாரிசு. அதிமுக–வில் திறமை இருப்பவர்கள், மக்களுக்கு உழைப்பவர்கள்தான் பதவிக்கு

வரமுடியும், சாதாரண தொண்டன், விவசாயத் தொழிலாளி கூட வரலாம். 14 ஆண்டுகாலம் மத்தியில் திமுக ஆட்சி செய்தபொழுது, தமிழகத்திற்கு தேவையான தொழிற்சாலைகளை கொண்டு வந்திருக்கலாம், புதிய, புதிய திட்டங்களை போடுவதற்கு நிதியை பெற்றுத் தந்திருக்கலாம், ஒன்றும் கொண்டு வரவில்லை. காவிரி நதிநீர் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினையை தீர்ப்பதற்கு ஏதாவது பாடுபட்டார்களா ? மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இருந்தால்தான் இவற்றையெல்லாம் செய்ய முடியும், அந்த வாய்ப்பு திமுக–விற்கு இருந்தும் செய்யவில்லை. மக்களைப் பற்றி கவலையில்லை, அவர்களுடைய வீட்டு மக்களைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். யார் பெரியவன் என்று சர்வே போட்டு, மூன்று பேரை எரித்தே கொன்றார்கள். இவையெல்லாம் கடந்தகால வரலாறு. அதிமுக ஆட்சியில், மக்களைப் பற்றி சிந்திப்பதுதான் அரசின் கடமை. உங்கள் துணையோடு, நான்காண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நாங்கள்தான் ஆட்சிக்கு வருவோம், ஏனென்றால், மக்கள்தான் நீதிபதி. நீங்கள் எத்தனை கட்சியில் கூட்டு சேர்ந்தாலும், மக்கள் நினைத்தால்தான் வெற்றி பெற முடியும். ஆனால், நாங்கள் மக்களோடு கூட்டணி வைத்திருக்கின்றோம், மக்கள் எண்ணுவதை நிறைவேற்றும் விதமாக நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

உழைப்பவர்கள் என்றைக்கும் உயர்ந்த பதவிக்கு வரமுடியும் என்பதற்கு நானே சான்று. சாதாாண கிராமத்தில் பிறந்து, வளர்ந்து, படித்து, உழைத்து, படிப்படியாக முன்னேறி இன்றைக்கு இந்த நிலைமைக்கு வந்திருக்கிறேன், உங்களைப் போல் குறுக்கு வழியில் வரவில்லை. நான் என்று எம்.எல்.ஏ ஆனேனோ, அப்பொழுதுதான் ஸ்டாலினும் எம்.எல்.ஏ ஆனார். 1981–ல் நான் சேவல் சின்னத்தில் வெற்றிபெற்று சட்டமன்றத்தில் நுழைகின்றபொழுதுதான், ஸ்டாலினும் வெற்றிபெற்று சட்டமன்றத்திற்கு வந்தார். ஆனால், நீ வந்த வழி வேறு, நான் வந்த வழி வேறு. நான் உழைத்து, படிப்படியாக முன்னுக்கு வந்து, இன்று முதலமைச்சராகியிருக்கிறேன், நீங்கள் அப்படியல்ல, உங்கள்

அப்பா திமுக தலைவராக இருந்தார், முதலமைச்சராக இருந்தார், அதனால் நீ எம்.எல்.ஏ ஆகி வந்துவிட்டாய். கிராமத்தில் பிறந்தவன் முதலமைச்சராக வேண்டுமென்றால் எவ்வளவு கடினம் என்பது மக்களுக்குத் தெரியும். குடும்பத்தில் அப்பன் பணக்காரனாக இருந்தால் கார் வாங்கிக் கொள்ளலாம், தானே சம்பாதித்து கார் வாங்குவது எவ்வளவு கஷ்டம்? நாங்கள் உழைக்கின்றோம், மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றுகின்றோம், அதனால், மக்கள் எங்களை வரவேற்கின்றார்கள். மக்களுடைய பிரச்சினைகளை அன்றாடம் தீர்த்துக் கொண்டிருக்கிறோம்.

கஜா புயலால் கடுமையான சேதம் ஏற்பட்டு, விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழந்துள்ள சூழ்நிலையில், 15 நாட்கள் அமைச்சர்கள் அங்கேயே முகாமிட்டு பணி மேற்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இன்றைக்கு புயலால் 2,21,000 மின்கம்பங்கள் சாய்ந்துவிட்டன. 1687 மின்மாற்றிகள் பழுதடைந்து விட்டன, 196 துணை மின்நிலையங்கள் சேதமடைந்துள்ளன. போர்க்கால அடிப்படையில் பணிகள் மேற்கொண்டு, கிட்டத்தட்ட 75 சதவீதப் பணிகள் இன்றைக்கு நிறைவு பெற்றிருக்கின்றன. அதேபோல, மின்சார ஊழியர்கள் அங்கேயே முகாமிட்டு, இரவு, பகல் பாராமல், மழையை பொருட்படுத்தாமல், மக்களுக்கு மின்சார இணைப்பு கொடுப்பதற்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். திமுக–வினரால் முடியுமா? என்றைக்காவது திமுக அமைச்சர்கள் 5 நாள் முகாமிட்டு வேலை பார்த்திருக்கிறார்களா, கிடையாது. ஆனால், அதிமுக–வில் அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எளிதாக மக்களை சந்திப்பார்கள், மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இரவு, பகல் பாராமல் பாடுபடுவார்கள், உழைக்கின்ற வர்க்கம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். டெல்டா பாசனப் பகுதிகள் வயல்கள் நிறைந்த பகுதி ஆதலால்

மின்கம்பங்கள் நடுவது மிகவும் கடினமான பணி, சொல்வது சுலபம், செயல்படுவது கடினம். உயிரைப் பணயம் வைத்து நம்முடைய மின்சார ஊழியர்கள் அந்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். வாழ்வாதாரம் இழந்த மக்களுக்கு புதியபுதிய திட்டங்களைக் கொண்டுவந்து அம்மாவினுடைய அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

காப்பீடு திட்டத்தை 2 லட்சத்திலிருந்து 5 லட்சமாக உயர்த்திய அரசு அம்மாவினுடைய அரசு. ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்தவர்கள் நோய்வாய்ப்பட்டால், 5 லட்சம் ரூபாய் வரை மருத்துவ சிகிச்சை பெறலாம். தமிழகம் முழுவதும் இன்றைக்கு சாலை வசதிகள் சிறப்பாக இருக்கிறது. எதிர்க்கட்சிகள் எத்தனை கட்சிகள் சேர்ந்து குறை கூறினாலும், மக்களோடு சேர்ந்து அவைகளையெல்லாம் முறியடித்து மீண்டும் அம்மாவினுடைய ஆட்சி தொடர நீங்கள் பக்கபலமாக இருப்பீர்கள் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் உங்களையெல்லாம் நாடி வந்து கேட்பார்கள், அப்பொழுது நீங்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தபொழுது, நாட்டு மக்களுக்கு என்ன செய்தீர்கள், என்ன திட்டங்களை கொண்டு வந்தீர்கள் என்று கேளுங்கள். ஏனென்றால், அதிகமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்றால்தான், மத்திய அரசிடம் போராடி அதிக நிதியை கேட்டு திட்டங்களை நிறைவேற்ற முடியும். அந்த வாய்ப்பை அம்மாவினுடைய அரசுக்கு தொடர்ந்து நல்குங்கள்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**